முருகப்பெருமான் துணை

**அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!**

**ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான்**

**எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த**

**மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்**

சோபகிருது வருடம் சித்திரை மாதம் 24 திகதி முதல்
சோபகிருது வருடம் சித்திரை மாதம் 31 திகதி வரை

**(07.05.2023 ஞாயிறு முதல் 14.05.2023 ஞாயிறு வரை)**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. இறைபலம் கொண்ட பாரதம்
   இயற்கை துணைகொண்ட தமிழகம்
   நிறைவான இந்தியா தமிழகத்தின்
   நிலமதனில் சோபகிருது தகர்திங்கள்
2. திங்களிலே அறுநான்குதிகதிமேல் முப்பானோர் திகதிவரை
   தெரிவிப்பேன் நடக்கும் நிகழ்வாக
   இங்கனமே வருங்கால பலன்குறித்த
   இயம்பிடுவேன் வார ஆசிதனை
3. ஆசிதனை அரங்கஞானி கேட்க
   அகத்திய மகரிஷி யானும் உரைப்பேன்
   வாசி வென்ற ஞானியர் கூட்டம்
   வலம் வந்து காத்தருள் புரிய
4. புரியவே இந்தவித காலம்
   புகலுவேன் அக்கினியாகவே
   தெரிவிக்க வெப்பம் மிகுந்தாலும்
   தேவைக்கேற்ப மழை வந்து
5. வந்துமே பாதுகாப்பு பெருகும்
   வளர்ச்சித் திட்டங்கள் என
   மந்தமான செயல்பாடு கண்டாலும்
   மதுமோகம் மிகுந்து காணும்

6. காணும் அரசின் வரையறை
காலநீட்டிப்பான சட்டங்களும்
ஞானமிலா கலக்கம் தரக்கூடும்
நம்பிக்கை தந்து நன்மை செய்யவந்த
7. செய்யவந்த கீழ்மேலான ஆளுமை
செயல்பாடுகளை மறந்துமே
அய்யமின்றி மக்களின் மேலே
அளவிலா நெருக்கடிகள் தரும்
8. தருகவே சமூக அக்கறைகள்
தவிடு பொடியாகி மதுவழி
வருங்காலம் சீர்கெட நேரும்
வளர்ச்சிப் பணிகளெல்லாம் முடங்கி
9. முடங்கி பொருளாதார வகை
முன்னேற்றம் காணா தவிக்கும்
இடரான செயல் வகைகட்கு
இனியும் தடை செய்யா அலட்சியம்
10. அலட்சியம் தொடரக் கண்டால்
ஆபத்து மக்கட்கு மட்டுமல்ல
அலட்சியமான ஆளுமைகட்குமே என
அகத்திய மகரிஷியும் எச்சரிக்கின்றேனப்பா
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சோபகிருது வருடம் சித்திரை மாதம் 24ம் நாள் 07.05.2023 ஞாயிற்றுக்கிழமை முதல் சித்திரை மாதம் 31ம் நாள் 14.05.2023 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகள் :

கடவுளின் பலத்தினை அதிகமாக கொண்டு ஆற்றலுடன் திகழும் பாரத தேசமே இயற்கையின் பாதுகாப்பையும் துணையையும் பெற்றுள்ள தமிழகமே

சோபகிருது வருடம் சித்திரை மாதம் 24ம் நாள் 07.05.2023 ஞாயிற்றுக்கிழமை முதல் சித்திரை மாதம் 31ம் நாள் 14.05.2023 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள காலத்தில் நிகழவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக அவதார ஞானி ஆறுமுக அரங்க மகான் கேட்க அகத்திய மகரிஷி யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

தற்சமயம் கோடை வெப்பத்தின் தாக்கம் நாடெங்கிலும் அதிகமாக இருந்து மக்களை வாட்டிய போதும் தேவையான மழை பொழிந்து குளிர்வித்து கோடை வெப்பத்தில் இருந்து மக்களை பாதுகாக்கும் அரசின் திட்டங்கள் மந்தகதியில் நடக்கும். ஆயினும் நாட்டினில் இந்தவித சூழலிலும் மதுவின் மேல் மக்களுக்கு மோகம் அதிகமாகி மது அருந்துவது அதிகமாகும் பலவிதமான செயல்பாடுகளிலே அரசின் வரையறையானது மக்களுக்கு கலக்கம் உண்டாக்கும். சட்டங்களும் காலநீட்டிப்புகளும் மக்களுக்கு மேலும் கலக்கத்தை உண்டுபண்ணும்.

பலவிதமான செயல்திட்டங்களை செய்வோம் என மக்களுக்கு நம்பிக்கையை ஊட்டும் விதமான வாக்குறுதிகளை அளித்து மக்களுக்கு நன்மை செய்திடவே வந்த மத்திய மாநில அரசுகளின் ஆட்சியர்கள் அவர்கள் வந்த நோக்கம் மறந்து, செயல்பாடுகளை மறந்து மக்கள் மீது அளவிலாத நெருக்கடிகளை தரும்.

இவ்விதமான நெருக்கடிகளால் சமூக அக்கறைகள் தவிடு பொடியாகி மதுப்பழக்கத்தினால் வரும்காலம் சீர்கெட்டு போக அதிகமான வாய்ப்புகள் உள்ளதப்பா. இத்தகைய செயல்பாடுகளினால் நாட்டின் வளர்ச்சிப் பணிகள் எல்லாம் முடங்கிப் போகும். பொருளாதார வகையில் முன்னேற்றம் அடைய முடியாமல் போய் பொருளாதார சிக்கல்கள் உருவாகும்.

ஆதலினாலே மக்களுக்கு துன்பம் விளைவிக்ககூடியதும், முன்னேற்றத்திற்கு இடையூராகவும் உள்ள செயல்பாடுகளை இனியும் தடைசெய்யாமல் தொடர்ந்து செய்திட்டால் அலட்சியமாக நடந்து கொண்டால் மக்களுக்கு ஆபத்து உண்டாவதோடு அலட்சியம் செய்திட்ட ஆட்சியருக்கும் பாதகமான சூழல் உருவாகும் என எச்சரிக்கையாக கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–